**செ. கு. எண்**:52 **நாள்**:18.02.2013

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் செய்தி குறிப்பு**

ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தை அரசு கிடப்பில் போட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளதாக நாளேடுகள் சில இன்று செய்திகளை வெளியிட்டுள்ளன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி** அவர்களின் முந்தைய ஆட்சிக்காலத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நிலத்தடி நீராதாரங்களிலுள்ள மிகுதியான புளோரைடு உப்பினால் ஏற்பட்டுள்ள புளோரோசிஸ் நோயைக் கட்டுப்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காகவும் ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் நோய் கட்டுப்படுத்தும் திட்டம் உருவாக்கப்பட்டது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் முந்தைய ஆட்சிக்காலத்தில், டிசம்பர் 2001 ம் ஆண்டு ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தை பன்னாட்டு நிதி ஆதாரம் பெறுவதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தார்கள். அதனடிப்படையில் 2002 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மத்திய அரசு கோரிய கூடுதல் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இத்திட்ட மதிப்பீடு ரூ.1005 கோடி அமைப்புச் செலவாகவும், ரூ.51.65 கோடி ஆண்டு பராமரிப்பு செலவு எனவும் திருத்தி அமைக்கப்பட்டு, திருத்திய திட்ட மதிப்பீடு ஆகஸ்டு 2005ம் ஆண்டு ஜப்பானிய நிதி உதவி பெறுவதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால்** மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பப்பட்டது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக** ஏப்ரல் 2006 ஆம் ஆண்டு மத்திய அரசின் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகம் ஜப்பான் வங்கியிடம் நிதி உதவி பெறுவதற்கு இத்திட்டத்தை மத்திய அரசின் பொருளாதாரத் துறைக்கு பரிந்துரை செய்தது. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அரசு இந்த திட்டத்திற்கான நிதியாதாரம் மற்றும் அனுமதிகளை பெறுவதற்கான அனைத்து பணிகளையும் நிறைவேற்றி இருந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தை கிடப்பில் போட்டது. ஒப்பந்ததாரர்களை நியமிக்கும் பணிக்கே ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகாலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் நோய் கட்டுப்படுத்தும் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட பின்னர், மைனாரிட்டி தி.மு.க. அரசின் ஆட்சிக்காலத்தில், **50** % பணிகள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும், ஆனால் மைனாரிட்டி தி.மு.க. அரசின் மெத்தனமான நிர்வாகத்தால் 18 % பணிகளே முடிக்கப்பட்டன.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்சினையை நன்கு உணர்ந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** மூன்றாம் முறையாக பதவியேற்றவுடன், உதாசீனப்படுத்தப்பட்டு கிடந்த, மிகுந்த பயன் அளிக்கக்கூடிய ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் நோய் கட்டுப்படுத்தும் திட்டப்பணிகளை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என ஆணையிட்டார்கள்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணைக்கிணங்க, அவ்வப்போது நேரிடையாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதிகாரிகளுக்கு தக்க உத்தரவுகளும், ஆலோசனைகளும் வழங்கி பணிகள் முடுக்கிவிடப்பட்டன. அரசின் சீரிய நடவடிக்கைகளின் காரணமாக கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் 74% பணிகள் நிறைவேற்றப்பட்டு, தற்போது 92% பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** திருக்கரங்களால் துவக்கி வைக்கப்படவுள்ளதை அறிந்து கொண்டு, வேண்டுமென்றே அவதூறை வாரி இறைக்க மு.க.ஸ்டாலின் முயன்றுள்ளார்.

ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் திட்டத்தை செயல்படுத்த தமது பதவிக்காலத்தில் எந்தவொரு முயற்சியும் எடுக்காத மு.க.ஸ்டாலின், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசால்** எடுக்கப்பட்டு வரும் இது போன்ற தொடர் நடவடிக்கைகளின் காரணமாக இரண்டு மாவட்டங்களில் உள்ள ஒட்டுமொத்த மக்கள் இந்த அரசுக்கு தொடர்ந்து அளித்து வரும் ஆதரவை பொறுத்துக் கொள்ள முடியாமல் வேண்டுமென்றே மக்களை திசை திருப்புவதற்காக இது போன்ற உண்மைக்கு புறம்பான செய்திகளை சொல்லுவதால் மக்கள் ஏமாந்து விட மாட்டார்கள்.

தலைமைப் பணியிடத்தில் குழாய் பதிக்கும் பணிகள், மின்னியந்திர உபகரணங்கள் பொருத்தும் பணிகள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் முழுவதுமாக முடிக்கப்பட்டு, **75** மீட்டர் உயரத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு இயல்பு நீர் கொண்டு செல்லப்பட்டு சோதனை ஓட்டமும் **3.12.2012** முதலே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இயல்பு நீர், தருமபுரி, போச்சம்பள்ளி, பாலக்கோடு, காரிமங்கலம், காடுசெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளை சென்றடைந்துள்ளது.

நாளொன்றுக்கு 160 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையப்பணிகள் முன்னேற்றத்திலுள்ளன. ஸ்பெயின் நாட்டு வல்லுனர்களின் ஆலோசனையின்படி மொத்தமுள்ள 12 வடிபடுகையில் 6 வடிபடுகைகளின் பணிகள் ஓரிரு நாட்களில் முடிக்கப்பட்டு, நீர் சுத்திகரிப்பு பணிகள் தொடங்கப்படவுள்ளன.

மொத்தமுள்ள 9936 கி.மீ. நீளம் குழாய் பதிக்கும் பணிகளில், அனைத்து குழாய்களும் பெறப்பட்டு, 8300 கி.மீ. குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 1602 கட்டுமான பணிகளில் 1435 பணிகள் முடிக்கப்பட்டு, 167 பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

பிரதான குழாய் அமைக்கும் பணியைப் பொறுத்த வரையில் மொத்தமுள்ள 278.41 கி.மீ. நீளத்தில், 266.76 கி.மீ. குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பிரிவு குழாய் அமைக்கும் பணியில் மொத்தமுள்ள 110.92 கி.மீ. நீளமுள்ள குழாய்களில், 104.58 கி.மீ. குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. துணை பிரிவு பிரதான குழாய் (ITM) அமைக்கும் பணியில் மொத்தமுள்ள 2616.24 கி.மீ. நீளமுள்ள குழாய்களில், 2258.10 கி.மீ. குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. உள்பகிர்மானக் குழாய் (INW) அமைக்கும் பணியில் மொத்தமுள்ள 6930.84 கி.மீ. நீளமுள்ள குழாய்களில், 5670.74 கி.மீ. குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரோசிஸ் நோய் கட்டுப்படுத்தும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணிகள் துரிதமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மக்கள் நலனில் எப்போதும் அக்கறை கொண்டுள்ள **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** இத்திட்டத்தினை இவ்வாண்டு ஏப்ரல் மாதம் துவக்கி வைப்பார்கள்.

**கே.பி.முனுசாமி,**
**நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**